இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், புது தில்லி

# பசுமைக்கதிர்

(ஜுலை - டிசம்பர் 2025)

# வேளாண்மை அறிவியல் மையம்

## திருவண்ணாமலை மாவட்டம்

கீழ்நெல்லி, சித்தாத்தூர் அஞ்சல்,
வெம்பாக்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம் - 604 410.
தொலைபேசி : 04182-290551, 6384093303,
kvktvmalai91@gmail.com
www.kvkthiruvannamalai.com

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. - குறள்

G20 भारत 2023 INDIA

KVKs 1974-2024

**ஆசிரியர் குரல்**

**விவசாயச் சொந்தங்களுக்கு,**

மீண்டும் பசுமைக்கதிர் வாயிலாக அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த மூன்று வருடங்களாக நிலக்கடலையின் சாகுபடி பரப்பு குறைந்து கொண்டே வருகிறது. இதற்கு முக்கிய காரணம் உயர்ரகங்களைப்பற்றியும் அவற்றின் சாகுபடி முறைகளைப்பற்றியும் விழிப்புணர்வு இல்லாமையே. மேலும், ஆட்கள் பற்றாக்குறையும் நிலக்கடலை சாகுபடியில் முக்கிய பங்கு வகிக்கிறது. களை மேலாண்மை, பூச்சி நோய் தாக்குதல், காட்டுப்பன்றி தாக்குதல் போன்றவையும் பரப்பளவு குறைய காரணமாக அமைகிறது. சிறுதானியங்கள் மற்றும் நெல் பயிரிடும் பரப்பு அதிகரித்தாலும் மாவட்டத்தின் முக்கிய பயிரான நிலக்கடலை சாகுபடி பரப்பை உயர்த்தும் நோக்கில் அதிக மகசூல் பெறக்கூடிய இரகங்கள், காட்டுப்பன்றியை கட்டுப்படுத்த இயற்கை வழிமுறைகள் மற்றும் இயந்திரங்கள் பற்றிய விழிப்புணர்வு, முதல்நிலை செயல்விளக்கத்திடல்கள் மற்றும் பயிற்சிகள் வேளாண் அறிவியல் மையத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதைப்பயன்படுத்தி விவசாயிகளும் நிலக்கடலை சாகுபடி பரப்பை வரும் காலங்களில் அதிகபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**ச.ரமேஷ், B.A.,LLB.**
சிறப்பு ஆசிரியர்

## வயல் வெளி ஆய்வுத்திட்டம்

### நெற்பயிரில் உயர் விளைச்சல் தரும் ரகங்களை மதிப்பீடு செய்தல்



வேளாண்மை அறிவியல் மையம் வயல்வெளி ஆய்வு திட்டத்தின் கீழ், வெம்பாக்கம் வட்டம் வெள்ளகுளம் கிராமத்தில் 5 முன்னோடி விவசாயிகளுக்கு உயர் விளைச்சல் தரும் ஆர்.என்.ஆர்.15048 மற்றும் கோ.55 நெற்பயிர் இரகங்களில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில் தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தால் வெளியிடப்பட்ட ஆர்.என்.ஆர்.15048 இரகத்தில் ஒரு எக்டருக்கு 58.08 குவிண்டால் கிடைப்பது உறுதி செய்யபட்டது. நிகர வருமானம் எக்டருக்கு ரூபாய் 72178/- வரை கிடைப்பதாக விவசாயிகள் கூறினர்.

### வேர்க்கடலையில் உயர் விளைச்சல் தரும் ரகங்களை மதிப்பீடு செய்தல்



வேளாண்மை அறிவியல் மையம் வயல்வெளி ஆய்வு திட்டத்தின் கீழ், வெம்பாக்கம் வட்டம் வெள்ளகுளம் கிராமத்தில் 5 முன்னோடி விவசாயிகளுக்கு உயர் விளைச்சல் தரும் டி.சி.ஜி.எஸ்.1694 மற்றும் வி.ஆர்.ஐ.10 வேர்க்கடலை இரகங்களில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில் தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகத்தால் வெளியிடப்பட்ட இரகமான வி.ஆர்.ஐ.10 ஒரு எக்டருக்கு 23.76 குவிண்டால் கிடைப்பதை உறுதி செய்தது. நிகர வருமானம் எக்டருக்கு ருபாய் 104654/-வரை கிடைப்பதாக விவசாயிகள் கூறினார்

### வெண்டையில் உயர் விளைச்சல் தரும் இரகங்களை மதிப்பீடு செய்தல்



புதிய உயர் விளைச்சல் தரும் கோ.எச்-5 மற்றும் அர்க்கா நிகிதா ஆகிய இரண்டு வெண்டை இரகங்களை ஆரணி வட்டம் மட்டதாரி கிராமத்தில் ஐந்து விவசாயிகளின் நிலங்களில் ஒப்பீடு செய்யப்பட்டன. இவற்றில், தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தால் வெளியிடப்பட்ட வெண்டை கோ.எச்-5 இரகம் அதிக விளைச்சளையும் (251.5 குவிண்டால் /எக்டர்) நிகர வருமானத்தையும் (108491/எக்டர்) கொடுத்ததாக கண்டறியப்பட்டது. அவை சராசரி விளைச்சலை விட 30.48 சதவீதம் கூடுதல் ஆகும்.

## மரவள்ளியில் உயர் விளைச்சல் தரும் நுண்ணூட்டங்களை மதிப்பீடு செய்தல்



உயர் விளைச்சல் தரும் நுண்ணூட்ட கலவைகளை கீழ்பெண்ணாத்தூர் வட்டம் வேட்டவலம் கிராமத்தில் உயர் விளைச்சல் தரும் நுண்ணூட்ட கலவைகளான TNAU மரவள்ளி பூஸ்டர் மற்றும் CTCRI மரவள்ளி ஸ்பெஷல் ஆகிய இரண்டு நுண்ணூட்டங்களை 5 விவசாயிகளின் நிலங்களில் மதிப்பீடு செய்யப்பட்டன. இதில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்ட TNAU மரவள்ளி பூஸ்டர் அதிக விளைச்சளையும் (419.4 குவிண்டால்/எக்டர்) நிகர வருமானத்தையும் (189671/எக்டர்) கொடுத்ததாக கண்டறியப்பட்டது. மேற்குறிப்பிட்ட விளைச்சல் சராசரி விளைச்சலை விட 18.73 சதவீதம் கூடுதல் ஆகும்.

## நெற்பயிரில் தண்டுத்துளைப்பானைக் கட்டுப்படுத்தும் தொழிற்நுட்பங்களை மதிப்பீடு செய்தல்





நெற்பயிரில் தண்டுத்துளைப்பானைக் கட்டுப்படுத்த வேளாண்மை அறிவியல் மையத்தால் வயல்வெளி ஆய்வு திட்டம் அனக்காவூர் வட்டாரம் காரணை கிராமத் தில் 5 முன்னோடி நெல் விவசாயிகளின் வயலில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தால் வெயியிடப்பட்ட தொழில்நுட்பம் எக்டருக்கு 60.78 குவிண்டால் மகசூல் கொடுத்தது. இது மத்திய நெல் ஆராய்ச்சி நிறுவன தொழில்நுட்பத்தை விட 5.43 சதவிகிதம் அதிகமாகும். தண்டுத் துளைப்பானைக் கட்டுப்படுத்தி நிகர வருமானமாக எக்டருக்கு ரூபாய் 53245/- வரை கிடைக்கப் பெற்று விவசாயிகள் மகிழ்சியடைந்தனர்.

# முதல்நிலை செயல்விளக்கங்கள்

## நெற்பயிர் வளர்ச்சிக்கு துத்தநாகத்தை கரைக்கும் பாக்டீரியா



முதல்நிலை செயல் விளக்கத்திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டு காரிப் பருவத் தில் தெள்ளார் வட்டம் சேனல் கிராமத்தில் 10 விவசாயிகளுக்கு துத்தநாகத்தை கரைக்கும் பாக்டீரியா அறிமுகம் செய்யப்பட்டது. இதனை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து விவசாயிகள் நெற்பயிரை சாகுபடி செய்தனர். இத்திட்டத்தின் பயனாக ஒரு எக்டருக்கு 58.67 குவிண்டால் மகசூல் மற்றும் நிகர லாபமாக ரூ.77,220/எக்டர் மற்றும் வரவு செலவு விகிதம் 2.34 பெற்று பயன்பெற்றனர்.

## கேழ்வரகு ரகம் ஏ.டி.எல்.2 செயல்விளக்கம்



வேளாண்மை அறிவியல் மையத்தின் மூலம் காரிப் பருவத்தில் கலசப்பாக்கம் வட்டம் மோட்டூர் கிராமத்தில் 10 விவசாயிகளுக்கு சம்பங்கி பூவில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய செயல்விளக்கம் நடத்தப்பட்டது. இச்செயல்விளக்கத்தின் பயனாக ஒரு எக்டருக்கு 105.9 குவிண்டால் மகசூல் பெற்றனர். இவை விவசாயிகள் பயன்படுத்திய தொழில்நுட்பத்தை விட 19.79 சதவிகிதம் கூடுதலாக மகசூல் பெற்றனர். இதன் வரவு செலவு விகிதம் ஒரு எக்டருக்கு 2.89 ஆகும்.

## வெளிப்புற ஒட்டுண்ணியை கட்டுப்படுத்த தெளிப்பான்

வேளாண்மை அறிவியல் மையத்தில் சார்பாக தெள்ளார் வட்டம், அருங்குணம் கிராமத்தில் கால்நடைகளை தாக் கும் வெளிப்புற ஒட்டுண்ணியை கட்டுப்படுத்த மெகாடெக்ஸ் தெளிப்பான் முதல்நிலை செயல் விளக்கம் செய்யப்பட்டது முதல் நிலை செயல் விளக்கத்திற்கு 10 பட்டியலின கால்நடை விவசாயிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வெளிப்புற ஒட்டுண்ணியை கட்டுப்படுத்தும் முறை சம்பந்தமான பயிற்சியும் அளிக்கப்பட்டது இச்செயல் விளக்கத்தின் விளைவாக கறவை மாடு வளர்ப்பில் ஆண்டுக்கு ரூபாய் 55,750.00 நிகர லாபம் கிடைக்கப்பெற்றது. மேலும் வெளிப்புற வெளிப்புற ஒட்டுண்ணியின் தாக்கம் 76 சதவீதம் குறைந்துள்ளது என தெரியவந்தது.

## நிலக்கடலையை தாக்கும் வேரழுகல் நோயைக் கட்டுப்படுத்தும் செயல்விளக்கம்



நிலக்கடலை விவசாயிகளுக்கு அதிக விளைச்சல் இழப்பை ஏற்படுத்தும் வேரழுகல் நோயைக் கட்டுப்படுத்த, வேளாண்மை அறிவியல் மையத்தால் வெம்பாக்கம் வட்டம் கரந்தை கிராமத்தில் 10 விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இச்செயல்விளக்கத்தின் முடிவாக ஒரு எக்டருக்கு 18.26 குவிண்டால் மகசூலாக விவசாயிகள் பெற்றனர். மேலும் வேரழுகல் நோயின் தாக் கம் மிகவும் குறைந்து 6.38 சதவீதமாக இருந்ததால் விவசாயிகளின் நிகர வருமானம் எக்டருக்கு ரூபாய் 41690/- ஆக அதிகரித்தது. மேலும் வரவு செலவு விகிதம் 2.02 என்றளவில் கணக்கிடப்பட்டது.

## விரிவாக்க செயல்பாடுகள் பாரத பிரதமரின் உழவர்களுக்கான கௌரவ நிதி வழங்குதல்



வேளாண் அறிவியல் மையம் சார்பாக இந்தியாவின் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்கள் காணொலி வாயிலாக உழவர்களுக்கான 20 மற்றும் 21வது கௌரவ நிதி வழங்கும் நிகழ்ச்சி 2.08.2025 மற்றும் 19.11.2025 நாளன்று நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. முக்கிய நிகழ்வாக மாண்புமிகு பாரதப்பிரதமரின் கௌரவ நிதி வழங்குதல் நிகழ்ச்சி விவசாயிகளுக்கு நேரிடையாக காணொலி வாயிலாக காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியினை பல்வேறு கிராமங்களிலிருந்து 355 விவசாயிகள் கண்டு பயன் பெற்றனர்.

## கிசான் கோஸ்தி





வேளாண்மை அறிவியல் மையம், மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் சீனிவாச அறக்கட்டளையுடன் இணைந்து வேளாண் மலைவாழ் மக்களின் தொழில் முனைவோர் கூட்டத்தை ஜமுனாமரத்தூரில் 10.09.2025 அன்று நடத்தியது. பெண்களுக்கான பல்வேறு தொழில்சாயப்புகள் பற்றி பேசினார். சிறப்பு விருந்தினராக வேளாண்மை அறிவியல் மையத்தின் பெருந்தலைவர் திரு. ச.இரமேஷ் அவர்கள் மற்றும் மத்திய மீன் வள தொழில்நுட்ப நிறுவனத்தின் முதுநிலை விஞ்ஞானி முனைவர். வி. சந்திரசேகர் அவர்கள் கலந்து கொண்டனர். அப்போது கூட்டுறவு சங்க விவசாயிகளுக்கு 5 மீன்பிடி பரிசல், 4 டீப் பிரீஜர் பாக்ஸ், 30 ஐஸ் பாக்ஸ் வழங்கப்பட்டது. வேளாண்மை அறிவியல் மையத்தின் சார்பாக ஏரிமரத்தூர் மற்றும் பூனாசிபாடி கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் தள்ளு வண்டியும் புளி கூழ் பிளியும் இயந்திரமும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஏரிமரத்தூர், விளாங்குப்பம், கீழ்ராவந்தவாடி மற்றும் பூனாசிபாடி கிராமங்களிலிருந்து 105 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## கால்நடை மருத்துவ முகாம்





வேளாண் அறிவியல் மையம் வெம்பாக்கம் வட்டம் வெங்களத்தூர் கிராமத்தில் 29.09.2025 நாளன்று பட்டியல் இன விவசாயிகளுக்கும், ஜமுனாமரத்தூர் வட்டம் கனகநேரி கிராமத்தில் 14.10.2025 அன்று மலைவாழ் விவசாயிகளும் பயன்பெறும் வகையில் கால்நடை முகாம்கள் நடைபெற்றது. கால்நடைகளில் நோய் மேலாண்மை, குடற்புழு நீக்கம் மற்றும் தீவன உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இம்முகாமில் 103 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். விவசாயிகளின் 336 கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டு நோய் தடுப்பு ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

## மண்வள முகாம்கள்

வேளாண் அறிவியல் மையத்தின் ஆரணி, கீழ்பெண்ணாத்தூர், ஜமுனாமரத்தூர் வட்டாரங்களிலுள்ள கனகநேரி, மட்டதாரி, கனகினியாத்தூர் கிராமங்களில் மண்வள முகாம் முறையே 8.8.25, 06.10.25 மற்றும் 16.10.25 அன்று நடத்தப்பட்டது. மேலும் 5.12.25 அன்று சேத்பட் வட்டாரத்திலுள்ள மொடைச்சேரி கிராமத்தில் உலக மண்தின விழாவும் கொண்டாடப்பட்டது. முகாம்களில் மண் ஆய்வின் முக்கியத்தும் மற்றும் மண் மாதிரி எடுத்தல் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சீனிவாசா தொண்டு நிறுவனம் கலந்து கொண்ட உலக மண்தின விழாவில் 190 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## பழங்குடியினர் பெருமை வாரம்

வேளாண்மை அறிவியல் மையம் நவம்பர் 15 முதல் 26ஆம் தேதி வரை பழங்குடித் தலைவர் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரரான பிர்சா முண்டாவின் பிறந்த நாளைக் கௌரவிக்கும் வகையில், பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்காக அறிவியல் மையத்தின் வாயிலாக 550 பழங்குடியின விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள், மதிப்பு கூட்டல் பயிற்சிகள், மீன் வளர்ப்பு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.







## தேசிய விவசாயிகள் தினம்





வேளாண்மை அறிவியல் மையம் சார்பாக 23.12.25 அன்று தேசிய விவசாயிகள் தினம் கொண்டாடப்பட்டது. வேளாண் அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் திரு.வே.சுரேஷ் அவர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அணைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக வேளாண்மை அறிவியல் மையத்தின் பெருந்தலைவர் திரு. ச.இரமேஷ், நபார்டு வங்கியின் மாவட்ட மேலாளர் திரு விஜய் எம். நீகர் அவர்கள், பாக்ட் உர நிறுவனத்தின் துணை பொது மேலாளர் திரு. கே.ஆர். இராவ் அவர்கள், துணை பொது மேலாளர் திரு. செந்தில் அவர்கள், விற்பனை அலுவலர் திரு.ஆர்.ராகேஷ் மற்றும் பட்டுவளர்ச்சி அலுவலர் திரு. மணி அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

விவசாய தின விழா கொண்டாட்டத்தின் போது இயற்கை விவாசயத்தில் சிறந்து விளங்கிய திரு.கே.வி.பழனி அவர்களுக்கு வேளாண்மை அறிவியல் மையத்தின் மூலம் சிறந்து இயற்கை விவசாயி விருது வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் வெம்பாக்கம் வட்டாரத்தைச் சேர்ந்த 295 விவசாயிகள் மற்றும் வாழவச்சனூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

## திறன் வளர்ப்பு பயிற்சி





வேளாண் அறிவியல் மையம், திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் ஹேண்ட் இன் ஹேண்ட் நிறுவனம் இணைந்து இளைஞர்களுக்கான ஆளில்லா விமானம் (Agri Drone) பயன்பாடு குறித்த இளைஞர்களுக்கான பயிற்சி 08-12-2025 முதல் 10-12-2025 மூன்று நாள் பயற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் ஹேண்ட் இன் ஹேண்ட் நிறுவனத்தின் தலைவர் முனைவர் ஒய்.ஜோ மற்றும் திரு சந்திப் முகர்ஜி அவர்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை அறிவியல் மையத்தின் பெருந்தலைவர் திரு.ச.ரமேஷ் அவர்கள் தலைமை தாங்கி இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பில் ஆளில்லா விமானம் ஆற்றும் முக்கிய பங்கு பற்றி சிறப்புரையாற்றினார். இதில் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள பல்வேறு கிராமங்களிலிருந்து 31 இளைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பயிற்சி பெற்ற அனைத்து இளைஞர்களுக்கும் பயற்சி சான்றிதழ், இடுபொருட்கள் மற்றும் கையேடுகள் வழங்கப்பட்டது.

# வேளாண் தொழில்நுட்பங்கள்

## நெற்பயிரில் தண்டுத்துளைப்பான் மூலம் ஏற்படும் பாதிப்பு மற்றும் ஒருங்கிணைந்த மேலாண்மை

அறிகுறிகள் : நாற்றாங்கால், நடவு செய்த இளம் பயிர், தூர் கட்டும் பருவம் மற்றும் கதிர் பிடிக்கும் தருணங்களில் என அனைத்து பருவத்திலும் சேதத்தை ஏற்படுத்துகிறது. தாய் அந்துப்பூச்சிகள் இலைகளின் மேல் பகுதியில் முட்டைகளை குவியல் குவியல்களாக இடும். வெளிவரும் இளம் புழுக்கள் இளம் பயிரின் தண்டில் துளையிட்டு உள்ளெ சென்று உட்பாகங்களை கடித்து உண்பதால் இளம் பயிரின் நடுக்குருத்து வாடிக் காய்ந்துவிடும். தாக்கப்பட்ட பயிர் வளர்ச்சி குன்றி காணப்படும். தூர்களின் எண்ணிக்கை வெகுவாக குறையும். கதிர் உருவாகும் சூழலில் தாக்கப்பட்ட பயிரில், மணிகள் பால் பிடிக்காமல் வெண் கதிர்களாக மாறுவதால் மகசூல் பெரிதும் குறைக்கப்படுகிறது. இளம் புழுக்கள் மஞ்சள் நிறத்துடனும் கரும்பழுப்புநிற தலை மற்றும் முதுகுடன் காணப்படும். தாய் அந்துப்பூச்சி பிரகாசமான வெள்ளை அல்லது மஞ்சள் நிறத்துடன், முன் இறக்கை நடுவில் கரும் புள்ளியுடன் காணப்படும். சாதாரணமாக பெண் அந்துப்பூச்சி இடும் முட்டை குவியலில் 50-200 முட்டைகள் காணப்படும்.

உயிரியல் முறை கட்டுப்பாடு : டிரைகோகிரம்மா ஜப்பானிகம் முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2சிசி என்ற அளவில் நடவு செய்த 30, 37, 44 மற்றும் 51 வது நாள் பயன்படுத்துவதன் மூலம் குருத்துப் பூச்சியை கட்டுப்படுத்தலாம். இது பூச்சியின் முட்டைபருவத்தில் அழிக்கவல்லது. இரசாயன முறையை விட எளியது. சிக்கனமானது.

இரசாயன முறை : பூச்சியின் தாக்குதல் பொருளாதார சேதநிலையை விட அதிகமாகும் போது ஏக்கருக்கு கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 50% SP 400 கிராம் (அ) குளோரோடேரேனிலிபுருள் 18.5% SC 60மிலி (அ) கார்போசல்பான் 25% EC 320-400மிலி என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். தொடர்ந்து ஒரே இரசாயன மருந்தை பயன்படுத்தாமல் மாற்றி தெளிப்பது நன்மை தரும்.


**சிறப்பு ஆசிரியர்**

திரு.ச.இரமேஷ், தலைவர், தமிழ்நாடு கிராம வளர்ச்சி நிறுவனம்.

**ஆசிரியர்**

திரு.வே.சுரேஷ், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்

**ஆசிரியர் குழு**

திருமதி.த.மார்க்ரெட், தொழில் நுட்ப வல்லுநர் (மனையியல்)

திரு.ப.நாராயணன், தொழில் நுட்ப வல்லுநர் (பயிர் பாதுகாப்பு)

மரு.கா.மாயகிருஷ்ணன், தொழில் நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்)

திருமதி.மா.ஐஸ்வர்யா, தொழில் நுட்ப வல்லுநர் (உழவியல்)

திரு.ர.விஜயகுமார், தொழில் நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை)

திருமதி.ம.சாந்தி, பண்ணை மேலாளர்

திரு.ப.சௌத்திரி, திட்ட உதவியாளர் (ஆய்வகம்)

**நிர்வாகக் குழு**

திருமதி.ம.விஜி அலுவலக உதவியாளர்

திரு.ஒ.சேகர், திட்ட உதவியாளர் (கணிப்பொறி)